IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS :வாசா.1) Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 23.04.2024 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 1071-2017 மற்றும் 8-2021 மற்றும் 160-2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை/கணவர் பெயர் | சேகரன் | கிராமம் | சூலூர் |
| தொழில் | துணை வட்டாட்சியர் | மதம் | |
| வயது | | | |

வாசா. 1 ஆக 23.04.2024 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் நபர். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சூலூர் வட்டம் மண்டல துணை வட்டாட்சியர். நீதிமன்றத்தில் இருந்து பட்டாஎண்.959 கருமத்தம்பட்டி கிராமம் புல எண்.614/1E தாக்கல் செய்ய சொல்லியும் மேற்படி பட்டா எண்.959 ன் பசளி 1379 முதல் 1400 வரையிலுள்ள அடங்கல் தாக்கல் செய்ய சொல்லியும் 1914 மற்றும் 1983 வருட ரீ-சர்வே ரெஜிஸ்டர் தாக்கல் செய்ய சொல்லியும் பணிக்கப்பட்டிருந்தது. நான் 1379 முதல் 1400 பசளிக்கான அடங்கல் அசல் கொண்டு வந்துளளேன். 1984 ம் ஆண்டு புல எண்.614/1E ன் UDR பட்டா கொண்டு வந்துள்ளேன். ரீ-சர்வே ரெஜிஸ்டர்கள் அனைத்தும் திருப்பூர் மாவட்டத்தில் இருந்தே இன்னும் வரவில்லை. அதனால் கொண்டு வர முடியவில்லை. அதேபோல் 23.11.1986 தேதியிட்ட தனி தாசில்தார் வழங்கிய பட்டாவும் கொண்டு வரவில்லை. அதுவும் திருப்பூர் மாவட்டத்தில் தான் உள்ளது, இன்னும் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவில்லை. 1379 முதல் 1400 பசளிக்கான அடங்கல் உண்மை நகல் சா.சா.ஆ.1. 1984 ம் வருடத்திற்கான UDR உண்மை நகல் சா.சா.ஆ.2.

<u>வாதி தரப்பு விசாரணை</u>

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மேற்படி அசல் ஆவணங்களை கேட்டு நாங்கள் பெற முடியுமா என்றால் முடியும். அந்த ஆவணங்களை 4

வார காலத்திற்குள் கொண்டு வந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும். எனவே சாட்சியிடம் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு மேலும் விசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/மணிகண்டன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur